பெரம்பூர், ஆர்.கே. நகர் தொகுதிகளில்

வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு!

சென்னை,ஆக.7-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் (5.8.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம், முல்லை நகர் பேருந்து நிலையம், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி, தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் மற்றும் தண்டையார்பேட்டையில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கத்தின் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் உருவான திட்டம் வடசென்னைப் வளர்ச்சி திட்டப்பகுதி ஆய்வின் விவரங்கள்:

எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களது சிந்தனையில் உதித்த திட்டத்தின் வளர்ச்சி பணிகள் குறித்து, அவர்களது வழிகாட்டுதலின் படி எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி.காகர்லா உஷா எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், பெருநகர மாநகராட்சியினுடைய ஆணையாளர் குமரகுருபரன், வடசென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஆர்.டி.சி ரவி தேஜா தொடர்ந்து இந்த பணிகளை ஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம்.

பெரம்பூர் மற்றும் ஆர்.கே. நகர் பகுதிகளில் உள்ள எம்டிசி பேருந்து நிலையங்களின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டோம். பெரம்பூர் பகுதியில் முல்லை நகர், உதயசூரியன் பகுதியில் கட்டப்படுகின்ற பேருந்து நிலையம் மற்றும் ஆர். கே. நகர் பகுதியில் புதிய பேருந்து நிலையம், விளையாட்டு அரங்கம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன.

இதில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 200 கோடி ரூபாய் செலவில் 11 புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 2025 நவம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பணிகள் முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்களால் நேரில் திறந்து வைக்கப்படும். இன்று மேற்கொண்ட ஆய்வில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், மண்டல குழு தலைவர் நேதாஜி யூ.கணேசன், மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் இளைய அருணா மற்றும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சிறந்த வசதிகளை உருவாக்கும் நோக்கத்தில், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நான்கு திட்ட பணிகள் 2025 நவம்பர் மாதத்திற்குள் நிறைவு பெறும் என நம்பிக்கை தெரிவிக்கின்றோம். குறிப்பாக, விளையாட்டு அரங்கப் பணிகள் 15% முன்னேற்றத்தில் உள்ளன. ஆர். கே.நகர் பேருந்து நிலையம் 15% பின்தங்கிய நிலையில் உள்ளது. அதனை விரைவுபடுத்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், நேற்றைய தினம் ஆர்.கே.நகர் பகுதியில் 3 முதல்வர் படைப்பகங்கள், இராயபுரம் மற்றும் பெரம்பூரில் தலா 1 முதல்வர் படைப்பகங்கள் என மொத்தம் 5 முதல்வர் படைப்பகங்களின் துவக்க விழா நடைபெற்றது. இவையும் 2025 நவம்பர் மாதத்திற்குள் திறக்கப்படும்.

மொத்தம் 282 திட்டப் பணிகளில் 80% வேலைகள் 2026 ஜனவரி மாதத்திற்குள் முடிவடையும் வகையில் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் பயன்பாட்டிற்காகவும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும் கள ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மற்ற பகுதிகளுக்கான வளர்ச்சி திட்டங்கள்:

மாதவரத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு பேருந்து சேவை: போக்குவரத்து துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, முதல்வர் உத்தரவிட்டுள்ளார். கூத்தம்பாக்கம் பேருந்து நிலையம்: இவ்வாண்டு இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும். செங்கல்பட்டு, ஆவடி பேருந்து நிலையங்கள்: இவையும் இவ்வாண்டு இறுதிக்குள் திறக்கப்படவுள்ளன. மாதவரத்தில் மெட்ரோ பணி முடிந்தவுடன் புதிய பேருந்து நிலையம்: வடசென்னைக்கு புதிய வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் அமையும்.

சட்ட வழக்கு நிலவரம்:

வழக்கு துரிதப்படுத்த முயற்சி நடைபெற்று வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேசர் மற்றும் திருவொற்றியூர் எம்எல்ஏ சங்கர் ஆகியோர் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர். செயலாளர் திருமதி.கார்லா உஷா மற்றும் உறுப்பினர் செயலர் பிரகாஷ், ஆகியோரும் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

மாநில மக்கள் நலன் கருதி, முதல்வர் அவர்களின் தொலைநோக்கு பார்வையின் கீழ் வடசென்னை மற்றும் பிற பகுதிகளில் நடைபெறும் இந்த திட்டங்கள், வாழ்க்கை தரத்தை உயர்த்தும் முக்கிய நடவடிக்கைகளாக அமையும். எங்கள் துறை அதிகாரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நகரமைப்பு குழுத் தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யூ.கணேசன், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண்மை இயக்குநர் ராகவன், பொது மேலாளர்கள் நெடுஞ்செழியன், ராஜசேகர், மாமன்ற உறுப்பினர்கள் மலைச்சாமி, ஜீவன், திருமதி.ஷர்மிளா காந்தி, திருமதி. குமாரி நாகராஜன், திருமதி. பவித்ரா, மாநகராட்சி, மின்சாரத்துறை மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

நேற்று (6 – 8 – 2025) நிகழ்வுகள்!

1. பள்ளி போக்குவரத்து வாகனங்களை முறையாக ஆய்வு செய்கிறதா ஒன்றிய அரசு?

திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா கேள்வி

பள்ளி போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறையை உறுதி செய்யும் சீரான ஒழுங்குமுறை சட்டங்கள் இல்லை என்பது குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா மாநிலங்கலவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாகனங்களின் தரநிலை, ஓட்டுநர் தகுதிகள் மற்றும் பயணிகள் வரம்புகள் குறித்த வரம்புகளை பள்ளிகள் சரியாக பயன்படுத்துகின்றனவா? அதற்கான ஆய்வுகளை ஒன்றிய அரசு முறையாக செய்கிறதா என அவர் கேட்டுள்ளார்.

பள்ளி பகுதிகளில் வேகத் தடைகள், அறிவிப்பு பலகைகளை நிறுவுதல் உள்ளிட்ட விரிவான பள்ளி பகுதி பாதுகாப்பு தரநிலைகளை அரசிட இருக்கும் திட்டங்கள் என்ன எனவும் அவர் கேட்டுள்ளார்.

2. ஆதார் அட்டை பயோமெட்ரிக்கில் தொடரும் சிக்கல்கள் தவிக்கும் பயனாளிகள்.. தீர்வில் தாமதம் ஏன்?

திமுக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா குற்றச்சாட்டு

ஆதார் அட்டைகளின் பயோமெட்ரிக் சரிபார்ப்பில் எழும் சிக்கல்கள் குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயோமெட்ரிக் சரிபார்ப்பில் அனுமதி இல்லாததால் பல்வேறு திட்டங்களின் கீழ் உண்மையான பயனாளிகளின் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மங்கலான கைரேகைகள் மற்றும் பழைய சரிபார்ப்பு கருவியின் கோளாறுகளால் பெண்கள் மற்றும் மூத்த குடிமக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதால் அவற்றை சரிசெய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

3. பெரம்பலூரில் இரயில்வே முன்பதிவு மையம் அமைத்திடுக!

பெரம்பலூர் அருண் நேரு கோரிக்கை

பெரம்பலூரில் கணினிமயமாக்கப்பட்ட இரயில் பயணிகள் முன்பதிவு மையம் (PRS) இல்லாததால் மக்கள் பிற மாவட்டங்களுக்கு சென்று முன்பதிவு செய்து சிரமப்படுவதை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் திமுக பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரம்பலூரில் முன்பதிவு மையம் அமைக்கக் கோரி பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின்மீது எடுப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேட்டுள்ள அருண் நேரு, விரைவில் ஒன்றிய அரசு ஆய்வுகள் நடத்தி பெரம்பலூரில் ஒரு முன் பதிவு மையத்தை நிறுவ வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

4. இரயில்வே லெவல் கிராஸிங்களில் விபத்துகளை தடுக்க துரித நடவடிக்கை

வேலூர் கதிர் ஆனந்த் கேள்வி

அதிகரித்து வரும் இரயில் போக்குவரத்து மற்றும் சாலை வாகனப் போக்குவரத்து காரணமாக வேலூர் மக்களவைத் தொகுதி, காட்பாடி அருகே லத்தேரி ரயில் நிலைய லெவல் கிராசிங்கில் விபத்து அபாயம் இருப்பதை சுட்டிக்காட்டி அதற்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேலூர் திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கோரிக்கை வைத்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் இன்டர்லாக் செய்யப்படாத லெவல் கிராசிங்குகளில் அதிக விபத்துகள் நடக்கின்றன என்றும் அவற்றை தடுக்க ஒரு ROB அல்லது RUB கட்டுவதன் மூலம் லெஅல் க்ராஸிங்கை அகற்ற முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் தேசிய நெடுஞ்சாலை-75 இல் காட்பாடி சந்திப்பில் உள்ள சாலை - ரயில் பாலத் திட்டத்தின் நிலை, அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி, டெண்டர் இறுதி செய்யும் தேதி மற்றும் கட்டி முடிக்கப்பட இருக்கும் தேதி குறித்தும் கேட்டுள்ளார்.

5. சரக்கு இரயில்களின் வேகத்தை அதிகப்படுத்த நடவடிக்கை

வடசென்னை கலாநிதி வீராசாமி கோரிக்கை

சரக்கு இரயில்கள் மற்றும் புறநகர் பயணிகள் இரயில்களின் வேகத்தை அதிகப்படுத்தும் மிஷன் ரப்தார் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் குறித்து வடசென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மற்றும் மேற்கு மண்டலங்களுடன் ட்ஒப்பிடும்போது, இத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு பாகுபாடுகள் இல்லாத முறையான ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறார்.

சென்னை-மதுரை, சென்னை-கோவை மற்றும் திருச்சிராப்பள்ளி -ராமேஸ்வரம் போன்ற தமிழ்நாட்டின் முக்கிய நெரிசலான வழித்தடங்களில் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் ஒன்றிய அமைச்சகம் இப்பணியை வேகமாக முடிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

6. தொழில்நுட்ப பூங்காக்களை இரண்டாம் கட்ட நகரங்களுக்கு மாற்றுக!

சேலம் செல்வகணபதி கோரிக்கை

டிஜிட்டல் வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கேற்ப மென்பொருள் தொழிநுட்ப பூங்காங்கள் தங்களை தகவமைத்து கொள்வது குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மென்பொருள் தொழிநுட்ப பூங்காங்கள் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் அவை சார்ந்த சேவைகளை இரண்டாம், மூன்றாம் கட்ட நகரங்களுக்கு மாற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கும் அவர் இதற்காக அரசு சுமார் 17 லட்சம் சதுர அடி இடத்தை அரசு ஒதுக்கியுள்ளது என்பது குறித்த தகவல்களையும் கேட்டுள்ளார். மேலும் நாடு முழுவதும் ஒன்றிய அரசு உருவாக்கியுள்ள 24 தொழில்முனைவோர் மையங்களை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு தினம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 7 -

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஐம்பது ஆண்டுகள் தி.மு. கழகத்தின் தலைவர் பொறுப்பை திறம்பட நிறைவேற்றி தமிழ் சமூகத்திற்கு தொண்டாற்றிய தகைசால் பெருந்தகை. 1957 முதல் போட்டியிட்ட அனைத்து சட்டமன்ற தேர்தலிலும் வெற்றிபெற்று 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக, 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை சிறப்புடன் நிறைவேற்றி பல முற்போக்கான, அறிவியல்பூர்வமான சட்டங்களை இயற்றி நவீன தமிழகத்தை வளர்த்தெடுத்த சிற்பி.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டவர். தாய் மொழி தமிழுக்கு செம்மொழிப் பெருமையை பெற்றுத் தந்தவர். வளரும் தலைமுறையின் எதிர்காலத்தை வளப்படுத்த தன் வாழ்நாள் முழுவதும் செயலாற்றிய தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆவது நினைவுநாள் இன்று (7ம் தேதி) வருகிறது.

மறைந்து ஏழு ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து வரும் முற்போக்குச் சிந்தனையின் திருவுருவமாம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் விதமாக தி.மு.க தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் காலை 9.30 மணி அளவில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள கழக அமைப்புகளின் அனைத்து அலுவலகங்களிலும், மாநகராட்சி பகுதிகளில் உள்ள வட்டங்களிலும், நகர, பேரூர் வார்டுகளிலும், ஒன்றியங்களில் உள்ள 199 ஊராட்சிகளில் முக்கிய சந்திப்புகளிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து மாலை அனிவித்து நினைவஞ்சலி செலுத்த வேண்டும்.

அந்தந்த பகுதிகளில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கழக மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் பொதுமக்கள் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

மயிலை சாந்தோம் காக்கும் கரங்களில் நல உதவிகள் - அறுசுவை வழங்கல்!

அ.ரேவதி எம்.சி. - கவிதா குமரிமுத்து தலைமை!

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி – நந்தனம் கி.மதி முன்னிலை!

சென்னை, ஆக 7-

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலாப்பூர் கிழக்கு - மேற்கு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சாந்தோம் காக்கும் கரங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை வழங்கும் நிகழ்ச்சி இன்று (07-08-2025) மாமன்ற உறுப்பினர் பகுதி அமைப்பாளர் அ.ரேவதி எம்.சி., பகுதி அமைப்பாளர் கவிதா குமரிமுத்து ஆகியோர் தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி முன்னிலையில் வகிக்கின்றனர்.

இதில் வட்டச் செயலாளர்கள் வி.வெற்றிவேல், ஆ.தவனேசன், மா.பா. அன்பு, கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி, டி.ராஜவேல், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ், ஆ நாகராஜன் மு.இ.ஏழுமலை, மு.ராஜேந்திரன், தாஸ், மலர், லட்சுமி, பானு, செல்வி சௌந்தராஜன், பானு சலீம், சாந்தி, சுசீலா, செல்வி, கோகிலா, சுந்தரி, நதியா, கலையரசி, வச்சலா, பூங்கோடி, கோமதி, கிருஷ்ணவேணி, கிரிஜா, கலைச்செல்வி, ராணி, தீபாமூர்த்தி, அன்னபூரணி, தங்கம், அன்புச்செல்வி, துளசி, டெல்லி ராணி, ரஞ்சிதம், லோக நாயகி, தேன்மொழி, அக்பரி, அமுதா, பார்வதி, செண்பகம், சுமித்ரா, கலைவாணி, சௌமியா, லிஸியா மேரி, அகல்யா விஸ்வநாதன், கிருஷ்ணவேணி, சித்ரா, யசோதா, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

லயோலா கல்லூரியில் முதுகலை (சமூகப் பணி) பயிலும் மாணவ, மாணவியர், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகச் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்படும் பணிகள், சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு குறித்து ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (06.08.2025) மேயர் திருமதி ஆர். பிரியாவுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், லயோலா கல்லூரியின் பேராசிரியர் கிளாட்சன் உடனிருந்தார்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதியில்

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

அமைச்சர்– மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர் பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை,ஆக.7-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி

என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாக

“உங்களுடன் ஸ்டாலின்”

என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 8 வார்டு-99 ல் அமைந்துள்ள தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில் கழக அயலக மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி அவர்களின் தலைமையில், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு, 8வது மண்டல குழு தலைவர் கூ. பி.ஜெய்ன், மண்டல 8 அலுவலர் திரு எல்.சுந்தரராஜன், 99வது வட்டக் கழக செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன், 99 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.சேகர் ஆகியோர் முன்னிலையில்

இன்று (6.8.2025) செவ்வாய்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..13 .மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 170 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 83 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 9 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 6 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல்17 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 108 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் -4 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -1விண்ணப்பம்

பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -943மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் - 211

என மொத்தமாக 1793 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1578 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார் .

மேலும் இந்நிகழ்வில் முன்னாள் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ப.ரங்கநாதன், மாநகராட்சி அதிகாரிகள் உதவி வருவாய் ஆய்வாளர்கள் ரமேஷ், பி.விஜய் கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் சுரேஷ் பாபு, வரி மதிப்பீட்டாளர் ஜே.ஹரி, 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே. சிவகுமார், மின்துறை பொறியாளர் கே.கந்தன், துப்புரவு ஆய்வாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, 100வது வார்டு கோட்ட பொறியாளர் ஜெகதீஷ், 108வது வார்டு கோட்ட பொறியாளர் திருமதி. மஸ்தானி, கழக நிர்வாகிகள், மாநகராட்சி பணியாளர்கள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.